

● காரைக்கால் கடற்கரையில் நேற்று தூய்மைப் பணியில் ஈடுபட்ட அமைச்சர் திருமுருகன், ஆட்சியர் ரவி பிரகாஷ் உள்ளிட்டோர்.

# காரைக்கால் கடற்கரையில் தூய்மை பணிகள்: புதுச்சேரி அமைச்சர், ஆட்சியர் பங்கேற்பு

**காரைக்கால்**

காரைக்கால் மாவட்டத்தில் இந்திய கடலோர காவல் படை மற்றும் கடற்கரை தூய்மை இயக்கம் சார்பில் சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை முன்னிட்டு நேற்று தூய்மைப் பணிகள் நடைபெற்றன.

இதில், புதுச்சேரி குடிமை வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன் மற்றும் ஆட்சியர் ரவி பிரகாஷ் ஆகியோர் தலைமை வகித்தனர். கடலோர காவல் படை காரைக்கால் மைய உதவி கமாண்டன்ட் கே.தனுஷ், காரைக்கால் துறைமுகத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரி கேப்டன் சச்சின் ஸ்ரீவாஸ்தவா, காரைக்கால் நகராட்சி ஆணையர் சச்சிதானந்தம், காரைக்கால் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தாமோதரன், புதுச்சேரி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை உதவிப் பொறியாளர் பிரபு, தன்னார்வலர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என 400-க்கும் மேற்பட்டோர் பங்கேற்று, கடற்கரையை தூய்மையாக வைத்துக்கொள்ள உறுதிமொழி ஏற்றனர். பின்னர், கடற்கரை பகுதி முழுவதும் குப்பையை சேகரித்து அகற்றினர்.